மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரக இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள், சென்னை–5.
முன்னிலை : திரு.மா.இராஜையா

செ.மு.ந.க.எண்1215/நிர்–2/2019 நாள்:09.02.2019

பொருள்: பணியமைப்பு – மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம் – சென்னை – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV (2015–2016)ல் தேர்வு செய்யப்பட்டு ஈரோடு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் தட்டச்சராகப் பணிபுரிந்து வரும் திருமதி.கே.காந்திமதி என்பவருக்கு பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது .

பார்வை :
1. இவ்வாணையரக இதே செ.மு.ந.க.எண்.5844/நிர்2/2017, நாள்.02.11.2017.
2. மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், ஈரோடு அவர்களின் கடித எண்.3596/அ/2018, நாள்.26.12.2018.

--------

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் (2015-2016) தொகுதி [IV] ல் தேர்வு செய்யப்பட்டு பார்வையில் காணும் இவ்வாணையரக செயல்முறை ஆணையின்படி, மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தில் தட்டச்சராகப் பணிபுரியும் திருமதி.கே.காந்திமதி, என்பவருக்கு பணியில் சேர்ந்த நாளான 02.11.2017 முப முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

2) மேற்படி பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாளான 02.11.2017 முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணிக் காலத்தில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண்பருவம் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

3) தகுதிகாண்பருவக் காலத்தில் மேற்படி தனியர் கீழே குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

- அலுவலக நடைமுறை நூல் (D.O.M)
- Certificate course in Computer on Office Automation

4) வரையறுக்கப்பட்ட மேற்படி தேர்வுகளை பணியில் சேர்ந்த நாள் முதல் ஐந்து ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெற தவறும் பட்சத்தில் இதே காரணத்திற்காக எவ்வித முன்னறிவிப்புமின்றி தனியர் பணியிலிருந்து நீக்கப்படுவாரென்றும் ஆணையிடப்படுகிறது.

5) தேர்வு செய்யப்பட்ட மேற்படி நபர் தமிழ்மொழியை பள்ளி இறுதி வகுப்பில் ஒரு பாடமாகக் கொள்ளாதிருப்பின் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு, 31(3)–ன்படி முதல் ஈராண்டு காலத்திற்குள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமென்றும்

அவ்வாறு தேர்ச்சி பெறத்தவறின் இதே காரணத்திற்காக அரசுப் பணியிலிருந்து எவ்வித முன்னறிவிப்புமின்றி நீக்கப்படுவாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

6) மேலும் மேற்காணும் பணியாளர்களுக்கு தற்காலிக பணியமைப்பு விதிகளின்படி தமிழ்நாடு அரசு ஊழியர்களின் (வரையறுக்கப்பட்ட பணிகள்) விதி 2016–ன் பிரிவு 28 (1)–ன் படி தனியர் பணியேற்ற நாள் முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுப்படுகிறது.

இணை இயக்குநர்

பெறுநர்
திருமதி.கே.காந்திமதி,
தட்டச்சர்,
மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
ஈரோடு.

நகல்

1. மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்,
   மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
   ஈரோடு.
2. இருப்புக்கோப்பு/உதிரி